

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.8.2025) கொளத்தூரில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டுள்ள திரு.வி.க.நகர் பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகர போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.8.2025) முகாம் அலுவலகத்தில், கழக துணைப் பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள், 2025ஆம் ஆண்டிற்கான தி.மு.க. முப்பெரும் விழாவில் பெரியார் விருது வழங்கப்படவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

### எம்.ஜி.ஆர். திரைப்பட பயிற்சி நிறுவன வளாகத்தில்

# அதிநவீன படப்பிடிப்புத் தளம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக. 27 -**

**தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ரூ.5.10 கோடி செலவில் புனர மைக்கப்பட்ட குளிர் சாதன வசதி யுடன் கூடிய படப்பிடிப்புத்தளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.8.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை, தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் 5.10 கோடி ரூபாய் செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத்தளத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப் படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிறுவனமானது திரைப்படத் தயாரிப்பு, தொழில்நுட்ப கல்வி நுணுக் கங்களையும் கலை உணர்வுகளை யும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறு வனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக் கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களை யும் பிற திரைப்படத் துணைப்பாடங் களையும் மாணவர்களுக்குக் கற்றுத் தருவதாகும்.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப் படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக ரூ.1.58 கோடி செலவில் இப்பயிற்சி நிறுவனத்தின் கூட்ட அரங்கம், பழுத டைந்த கட்டடங்கள் மற்றும் மின்க லன்கள் போன்றவை சீரமைக்கப் பட்டுள்ள தோடு, மாணவ, மாணவி யர் மற்றும் பணியாளர்கள் அமர்ந்து உணவு அருந்துவதற்காக ரூ.25 இலட்சம் செலவில் உணவு அருந்தும் அறையும் அமைக்கப்பட்டது. மேலும், இந்நிறுவனத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட வல்லுநர் குழு அமைக்கப் பட்டு, அக்குழு வின் பரிந்துரையின் பேரில் மாணவர் கல்வி நலன் கருதி பாடத்திட்டங்கள் தரம் உயர்த்தப்பட் டுள்ளது. இந்நிறுவனத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களின் நலன் கருதி இறுதித் திட்ட குறும்படப் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவினம் ஒவ்வொரு குழுவிற்கும் ரூ. 1 இலட்சம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நிறு வனத்தை மேலும் மேம்படுத்தும் வகையிலும், மாணவர்களின் கல்வி நலன்கருதியும், தமிழ்நாடு சட்டமன் றப் பேரவையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக் கையில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ஒப்பனை அறைகள், அலங்கார உடை அறை, உணவு அருந்தும் அறை ஆகியவை இணைந்த குளிர்சாதன வசதியுடன் கூடிய சுமார் 17,517 சதுர அடி படப்பி டிப்புத்தளம், பழைய மாணவர் விடுதி, நீதிமன்றம், சிறைச்சாலை, படப்பிடிப் புத் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய குளிர்சாதனக் கருவிகள், இரண்டு புதிய மின்மாற்றிகள் (11 kv HT 500 KVA Transformers) மற்றும் இதர மின் சீரமைப்புப் பணிகள் உள்ளிட்டவை 5.10 கோடி ரூபாய் செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்டு. முதல மைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புனரமைக்கப்பட்ட குளிர் சாதன வசதியுடன் கூடிய படப்பிடித்துத் தளம் திரைப்படத்துறையினருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செய லாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செய லாளர் வே. ராஜாராமன், செய்தி மக் கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் ட்ராட்ஸ்கி மருது, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் (முழு கூடுதல் பொறுப்பு) மு.மேகவர்ணம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.8.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் மருதூர் இராமலிங்கம், 2025ஆம் ஆண்டிற்கான தி.மு.க. முப்பெரும் விழாவில் பேராசிரியர் விருது வழங்கப்படவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### மாநிலங்களுக்கு இடையிலான 64வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகளில்

# ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் வென்றது தமிழ்நாடு தடகள அணி!

## பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

**சென்னை, ஆக.27-**

**துணை முதலமைச்சர். உதயநிதி ஸ்டாலின் அவர்களை, 64-வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகளில் ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் வென்ற தமிழ் நாடு தடகள அணியின் தங்கப்பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள் நேற்று முன்தினம் (25.8.2025) நேரில் சந் தித்து வாழ்த்துப் பெற்றனர்.**

சென்னை நேரு விளையாட்டரங்கில் 20.8.2025 முதல் 24.8.2025 வரை மாநிலங்களுக்கிடையேயான 64 வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகள் நடை பெற்றது. இந்தப் போட்டிகளில் தமிழ்நாடு தடகள அணி ஒட்டுமொத்த சாம்பியன் ஷிப் வென்றது.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 900 தடகள விளையாட்டு வீரர், வீராங் கனைகள் கலந்து கொண்ட தேசிய சீனி யர் தடகளப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 80 தடகள விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

**11 தங்கப் பதக்கங்கள்**

பெண்களுக்கான 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் செல்வி சே. தன லட்சுமி 2 தங்கப் பதக்கங்களையும், ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப் பந் தயத்தில் செ. தமிழரசு, 400 மீட்டர் ஓட் டப் பந்தயத்தில் தெ. விஷால், உயரம் தாண்டுதல் போட்டியில் செல்வி கி. கோபிகா, தடியூன்றி தாண்டுதல் போட்டி யில் செல்வி இ.பிரனிகா, க. ரீகன் மற்றும் மு. கௌதம், டெக்லத்தான் போட்டியில் எஸ். ஸ்டாலின் ஜோஸ் என வீரர், வீராங்கனைகள் தனிநபர் பிரிவில் மொத் தம் 9 தங்கப் பதக்கங்களை வென்றனர்.

மேலும், 4x100 மீட்டர் ஓட்டப்பந்தயத் தில் பெண்கள் பிரிவில் செல்வி ரா. பவித்ரா, செல்வி ம. ஏஞ்சல் சில்வியா, செல்வி ரா. அபிநயா, செல்வி சே. தன லட்சுமி ஆகியோர் கொண்ட குழுவினரும், 4x400 மீட்டர் ஓட்டப்பந்த யத்தில் ஆண்கள் பிரிவில் த. சந்தோஷ், ர. ராஜேஷ், த. யோகேஷ், தெ.விஷால் ஆகியோர் கொண்ட குழுவினரும் தலா ஒரு தங்கப் பதக்கம் வென்றனர்.

**9 வெள்ளிப் பதக்கங்கள்**

100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் செல்வி ரா. அபிநயா, 200 மீட்டர் ஓட்டப் பந்தயத் தில் க.ராகுல் குமார், 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில்

ர. ராஜேஷ், 110 MTH தடை ஓட்டம் போட்டியில் ரா. மானவ், உயரம் தாண் டுதல் போட்டியில் ஜோ. ஆதர்ஷன் ராம், 100 மீட்டர் தடை ஓட்டம் போட்டியில் செல்வி கொ. நந்தினி, 400 மீட்டர் தடை ஓட்டம் போட்டியில் செல்வி மை. ஒலிம்பா ஸ்டெஃபி, ஹெப்டத்லான் போட்டியில் செல்வி ச. தீபிகா ஆகிய வீரர், வீராங்க னைகள் தனிப்பிரிவில் மொத்தம் 8 வெள்ளி பதக்கங்களை வென்றனர்.

மேலும், 4x100 மீட்டர் ஓட்டப்பந்தயத் தில் ஆண்கள் பிரிவில் சி. அருண் குமார், க. ராகுல், ம. வருண், செ. தமிழ ரசு, வீ. நவீன் ஆகியோர் கொண்ட குழு வினர் ஒரு வெள்ளி பதக்கம் வென்றனர்.

**11 வெண்கலப் பதக்கங்கள்**

100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் க. ராகுல் குமார், 10,000 மீட்டர் ஓட்டப் பந் தயத்தில் திருமதி த.லதா, 3,000 மீட்டர் ஸ்டீபில் சேஸ் போட்டியில் செல்வி எம். அனுபிரியா, 20 கி.மீ நடை ஓட்டம் போட் டியில் செல்வி மு. மோகவி, தடியூன்றி தாண்டுதல் போட்டியில் லோ. கமல் மற் றும் செல்வி த. சத்யா, மும்முறை தாண் டுதல் போட்டியில் சி. பிரவீன், நீளம் தாண்டுதல் போட்டியில் ரா. சுவாமி மற் றும் செல்வி அ. ஷெரின் ஆகிய வீரர், வீராங்கனைகள் தனிப்பிரிவில் மொத் தம் 9 வெண்கலப் பதக்கங்களை வென் றனர்.

மேலும், 4x400 மீட்டர் ஓட்டப்பந்த யத்தில் பெண்கள் பிரிவில் செல்வி மை. ஒலிம்பா, செல்வி ச. நிதாலியா, செல்வி வெ. தேசிகா, செல்வி ரா. வித்யா ஆகி யோர் கொண்ட குழுவினரும், 4x400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலப்பு பிரிவில் அ. சுராஜ், செல்வி வெ. தேசிகா, லெ. அஸ்வின், செல்வி ச.நிதாலியா, த. யோகேஷ், செல்வி ரா. ஹர்ஷிதா ஆகி யோர் கொண்ட குழுவினரும் தலா ஒரு வெண்கலப் பதக்கம் வென்றனர்.

இன்று துணை முதலமைச்சர் அவர் களை சந்தித்த பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள், முதலமைச்சர் அவர் கள் தமிழ்நாட்டில் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு, போட்டிகளில் கலந்து கொள்ள நிதியுதவி, போக்குவரத்து செலவு, உதவித்தொகை, விளையாட்டு உபகரணங்கள் வாங்க நிதியுதவி உள் ளிட்ட பல்வேறு உதவிகளை தொடர்ந்து வழங்குவதால் தாங்கள் 64 வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகளில் ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் வென்றுள்ளதாக வும், இதற்காக முதலமைச்சர் அவர்க ளுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித் தனர்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனை வர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பி னர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்கத்தின் செயலாளர் திருமதி சொ.லதா, மூத்த துணை செயலா ளர் க.புகழேந்தி, தடகள பயிற்சியாளர் ஜெ.பிரேம் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரியில் தி.மு.க. வர்த்தகர் அணியின் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டக் கழகச் செயலாளர்கள் டி.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கேவிஸ் சீனிவாசன் வரவேற்றார். மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் பி.டி.அன்பரசன் முன்னிலை வகித்தார். இதில் வர்த்தகர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, சென்னை நேரு விளையாட்டரங்கில் 20.8.2025 முதல் 24.8.2025 வரை நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான 64 வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகளில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் வென்ற தமிழ்நாடு தடகள அணியின் வெண்கலப் பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள் நேற்று முன்தினம் (25.8.2025) சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்கத்தின் செயலாளர் திருமதி சொ.லதா, மூத்த துணை செயலாளர் க.புகழேந்தி, தடகள பயிற்சியாளர் ஜெ.பிரேம் ஆனந்த் ஆகியோர் உடனிருந்தனர்.